2014 ஆகஸ்ட் 12]

கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு 2-ஜியில் கொள்ளையடித்த 1,76,000 கோடி ரூபாய் பணத்தை எப்படிப் பாதுகாப்பது, இந்த ஊழலிலிருந்து கனிமொழியை எப்படிக் காப்பாற்றுவது என்ற எண்ணத்திலே இருந்தார்களே தவிர, மக்களைப் பற்றி கவலைப்படாதவர்கள், கால்நடைகளைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவாட்டிலிருந்துகூட இரத்தம் வருவதைப் பார்த்துவிடலாம். ஆனால், கருணாநிதியிடமிருந்து கருணையை எப்பொழுதுமே எதிர்பார்க்க முடியாது என்பதற்கு இது ஒரு சான்று என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரந்தூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மகிழ்ச்சியான செய்திக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 416, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

416—

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

***28549—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரப்படும் செயற்குறிப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் கடந்த 8-5-2013 அன்று அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று ஒரே அறிவிப்பாக அறிவித்து, 2,260 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக இன்றைக்கு நெசவாளர்கள் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மலையாண்டிபட்டிணம், காந்திஜி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஸ்ரீ காயத்திரி தேவி கூட்டுறவுச் சங்கம், மடத்துக்குளம் ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை கூட்டுறவுச் சங்கம் என மூன்று சங்கங்கள் இயங்கி வருகின்றன. காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வீடுகள் வேண்டும் என விண்ணப்பித்த 6 உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் என அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 6 வீடுகளை அவர்களுக்கு ஒதுக்கி, 15,60,000/- ரூபாய் நிதியொதுக்கி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மற்றச் சங்கங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அவையும் ஆய்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட அந்த நெசவாளர்களுக்கு வீடுகள்

2014 ஆகஸ்ட் 12]

கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

"அஸ்வினியும் பரணியும்
அழகுமிகு கார்த்திகையும்
இளையவளாம் ரோகிணியும்
இடம்மாறிய சீரிடம்மிருக
ஆறாவதாம் திருவாதிரையும்
ஆரணங்கு புனர்பூசமுமே
பூசத்தோடு ஆயில்யமும்
புகழுடைய மகமும் ஆங்கே
நாளிலே பூரம் உத்திரம்
நன்மையாம் ஹஸ்தம் வந்தால்
சித்திரைத் திருநாளோடு
சீர்மிகு ஸ்வாதி சேர்ந்து
விரும்பிய விசாகம் அனுஷம்
வேண்டிய கேட்டை மூலம்
பூப்போன்ற பூராடத்தோடு
புண்ணியமாம் உத்திராடமும்
தெள்ளிய திருவோணமும்
தெவிட்டாத அவிட்டமும் ஆங்கே
வருமின் சதயம் தானே
வந்தபின் பூரட்டாதி தோன்றி
உத்திரட்டாதி தொடர்ந்து
உடனிருக்கும் ரேவதியோடு"

இத்தனை நட்சத்திரமும் இயற்கையிலேயே இருந்தாலும், அத்தனை நட்சத்திரமும் ஆகுமா உமைப்போல் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடத்துக்குளம் தொகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள்.

மடத்துக்குளம், வாளவாடி, உடுக்கம்பாளையம், சின்னபூப்பஞ்சாலை, பாப்பவளம், கொடுங்கியம், மலையாண்டிபட்டிணம் ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். நெசவாளர்கள் அதிகமாக உள்ள அப்பகுதிகளில் அரசு மூலமாக வழங்கக்கூடிய மின் மோட்டார்கள் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம், மானிய விலையில் நூல் போன்றவற்றை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. திரும்பவும் அவர்களுக்கு அரிய வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 417, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

417—

தரம் உயர்த்துதல்

***4036—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையிலுள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையில் உள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே, வரும் கல்வியாண்டுகளில்